ஸ்ரீகுருப்யோ நம :

# ஸ்ரீகுருப்ரகாசம்

**சுடர் 10**

## யார் பூர்ணன்?

சாதுர்யவான் விவேகீ ச அத்யாத்ம ஞானவான் சுசி: !
மானஸம் நிர்மலம் யஸ்ய குருத்வம் தஸ்ய சோபதே !! (குரு கீதை 8–85–)

"திறமை, விவேகம், அத்யாத்ம ஞானம், பரிசுத்தம், நிர்மல மனம் இவைகளை உடையவனாக இருப்பவன் எவனோ அவனிடம் தான் குருத்தன்மை ப்ரகாசிக்கும்" என்று குரு கீதை கூறுகிறது.

### 1. ஸதாபிஷேகம்

மேற்கண்டவாறு ப்ரகாசித்தவர் தான் ஸத்குரு தேவேந்திரர் அவர்கள். அவர்களுடைய சரீரத்திற்கு வயது 80 முடிந்துவிட்டது. அதாவது அவர்களே ஆத்மனிடம் குறிப்பிட்டபடி 1000 பிறை தரிசனம் முடித்தவர்கள். சதாபிஷேகம் செய்ய வேணுமென்று விரும்பினார் அவரின் திருக்குமாரர் ஸ்ரீவெங்கடேசுவரனும், மருமகள் ஸ்ரீமதிச்யாமளாவும். தன் சரீர அசக்தத்தைக் குறிப்பிட்டு, படாடோபத்தை விரும்பாதவராதலால் மிகவும் சுருக்கமான முறையில் செய்யப்பணித்தார்கள்.

"பிறந்த நாளேதோ பெருவிழாச் செய்வீர்! 'பிறந்ததெவண் நாம்?" என்று பேணிப் பிறந்திருத்தல் இன்று என்றும் ஒன்றாய் இங்கு பொருளில் பிறந்த அன்றே பிறந்தநாளாம். பெரிய விழாவாக பிறந்த நாளைக் கொண்டாடுகிறவர்களே! பிறந்தநாள் என்பது எது? கேளுங்கள். நான் என்ற தேகாத்ம புத்தி பிறந்தது எங்கிருந்து எனவிசாரித்து – அதன் பயனாக பிறப்பிறப்பில்லா என்றும் ஏகமாய் விளங்கும் ஆன்மாவில் ஐக்கியப்படுகின்ற அந்த நாளே உண்மையில் பிறந்தநாளாகும். (பிறந்த நாள் எனும் பிறப்புக்கு அழாது பிறந்தநாள் உற்சாகமே பேணல்– இறந்த பிணத்துக்கு அலங்கரிக்கும் பெட்பு என்றே தன்னை உணர்ந்து ஒருங்கல் தானே உணர்வு.)" என்ற ரமண அமுதத்தை குருநாதர் உண்டவராதலால் அதனை பெருவிழாவாக செய்ய இசைய வில்லை என தோன்றுகிறது. அவரது விருப்பம் போல் காஞ்சிபுரத்தில் ஏற்பாடாகியது. காஞ்சீபுரத்தில் ஸ்ரீகாமாக்ஷியம்மனுக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகள், ஏகாதச ருத்ராபிஷேகம் என ஏற்பாடாகி 11–06–1980 என முடிவு செய்யப்பட்டு உறவினர்களுக்கும், சிஷ்யர்களுக்கும், நண்பர்களுக்கும் பத்திரிகை

அனுப்பப்பட்டது. அடியேனும் பத்னி, குமாரனுடன் விடயல் கருப்பூரிலிருந்து காஞ்சி வந்தோம். அன்று காலையே ஸ்ரீஅம்பாள் சன்னதியில் எதிரில் உள்ள மண்டபத்தில் ஏகாதசருத்ரஜபத்துடன் கலசங்கள் வைக்கப்பட்டு ஜபமும் பாராயணமும் நடைபெறத் துவங்கின. சுமார் 12 மணிக்கு ஜபம் முடிந்து கலசங்கள் உத்வாஸனம் செய்யப்பட்டு ஸ்ரீகாமாக்ஷி அம்மனுக்கு அபிஷேகம் செய்யப்பட்டது. உடன், அந்த அபிஷேக தீர்த்தத்தைப் பிடித்து ஸ்ரீஸத்குருநாதரை பீடத்தில் எழுந்தருளப்பண்ணி, அவர்களுக்கு வேத வித்துக்களால் அபிஷேகம் செய்விக்கப்பட்டது. பின்பு அம்பாளுக்கு ஸஹஸ்ரநாம அர்ச்சனை முதலானவை செய்யப்பட்டு 1 மணி சுமாருக்கு ஸ்ரீஸத்குருநாதரவர்கள் ஒவ்வொருவரையும் தக்கபடி விசாரித்து தனித்தனியே ப்ரஸாதம் வழங்கினார்கள். ஸ்ரீகாஞ்சி மடத்திலிருந்து ஸ்ரீபரமாச்சார்யாள் மரியாதை சன்மானம் அனுப்பி ஏலக்காய் மாலையுடன் கௌரவித்தார்கள். இவ்வாறு அன்று ஸ்ரீஅனந்தாநந்தநாதர் அவர்களின் சதாபிஷேக விழா இனிதே நடைப்பெற்றது. அன்று இரவே அவரவர்கள் இருப்பிடம் சென்றாகிவிட்டது. நாங்களும் சென்னை வந்து ஸ்ரீகுருநாதர் இல்லம் சென்று மறுநாளும் அவர்களுக்கு வந்தனம் செய்துவிட்டு ப்ரஸாதத்துடன் விடயல் கருப்பூர் திரும்பினோம்.

## 2. திதி நித்யா

இவ்விடத்தில் நவாவரண பூஜையில் பூஜிக்கப்படுகின்றதும், ப்ரபஞ்சத்தில் தினசரி வருகின்ற திதி எனப்படுகிறதுமான திதி நித்யா (சுக்ல பக்ஷ – க்ருஷ்ணபக்ஷ) தேவிகளைப் பற்றி சற்று தெரிவிக்க வேண்டியுள்ளது. சுக்லபக்ஷத்து ப்ரதமை முதல் பௌர்ணமி வரையில் 15 திதிகள் என்பது தெரிந்ததே! இவைகள் ஒவ்வொன்றும் ஒரு நித்யாதேவி எனப்படுவார்கள். அதாவது திதிநித்யா தேவிகள். காமேச்வரி என்பவள் சுக்லபக்ஷ ப்ரதமை திதியாவாள். அதுபோல் பௌர்ணமி சித்ராநித்யா எனப்படுவாள். க்ருஷ்ண பக்ஷத்தில் ப்ரதமை முதல் அமாவாசை வரை இந்த நித்யா தேவிகளே வரிசை மாறி தலைகீழாக சித்ரா முதல் காமேச்வரி வரை குறிப்பிடப்படுகிறார்கள். இவர்களை நவாவரண பூஜையில் மத்திய முக்கோணத்தில் பக்கத்துக்கு ஐவராகவும் மத்தியில் ஸ்ரீமஹா நித்யை என்கிற லலிதையையும் பூஜிப்பது பத்ததி முறை. இவர்கள் காலஸ்ரூபமானவர்கள், பகலில் ப்ரகாசரூப சிவம் எனவும், இரவில் விமர்சரூப சக்தி எனவும் கூறப்படுவார்கள். காலாதிஷ்டான தேவதைகளான இவர்களுக்கு தனித்தனி சக்ரங்கள், இவர்களுக்கென ஆவரண தேவதைகள் மந்த்ரங்கள் என தனியே இருக்கின்றன. இது விவரம், நித்யா

ஷோடசீகார்ணவம், தந்த்ர ராஜம் முதலிய தந்த்ரசாஸ்த்ரங்களில் காணலாம். இந்த பதினைந்து திதி நித்யா தேவிகளின் சக்ரங்கள், ஆவரண தேவிகள் பற்றிய முழுக்குறிப்பும் 1977– ல் அடியேனுக்குக் கிடைத்து அதனை அழகுபட எழுதி வைத்து நவாவரண பூஜையினுடே இதையும் விசேஷமாக பூஜைகள் செய்து வந்தேன். அவை மிக அபூர்வமானதாயும், அதன் பலப்ராப்தி மிகவும் விசேஷமாக இருந்ததையும் கருத்தில் கொண்டு இவைகளை தனியாக அச்சுப்போட்டு ஆன்மீக உலகில் வழங்கலாம் என்ற எண்ணம் இருந்து வந்தது, அந்த தேவிகளின் சக்கரங்களை முக்கோணமாகவும், நடுவில் ஒரு மஹா நித்யையாக ஒரு ஸ்ரீசக்ரத்தையும் பக்கலில் ஸ்ரீச்யாமளா, ஸ்ரீவாராஹி எனவும் அமைத்தேன். இந்த எண்ணம் ஸ்ரீஸத்குருநாதர் சதாபிஷேக சமயம் செயலாக்கமாக அமைந்தது. தனித்தனி யந்த்ரங்களையும் தனித்தனியே Block Maker மூலம் ப்ளாக்குகள் தயார் செய்து அதனை முக்கோணமாக Compose செய்து கும்பகோணம் ஸ்ரீவித்யா பிரஸில் ஆர்ட் பேப்பரில் அச்சடிக்க கொடுக்கப்பட்டு விட்டது. இதற்கு ஆகும் பொருட்செலவை விடயல் கருப்பூரில் இருக்கும் ஸ்ரீ கே. ராமதாஸ். என்பவர் ஏற்றுக் கொண்டார். இதன் அமைப்பில் தக்க ஆலோசனைகள் வழங்கி உதவியவர்கள் தீக்ஷா ஜேஷ்டரும் தற்காலம் சென்னையிலுள்ள இஞ்சிக்கொல்லை ப்ரம்மஸ்ரீ Y. வேதமூர்த்தி சாஸ்திரிகள் ஆவார். படத்தின் proof (படம்) போட்டு அதனை எடுத்துக்கொண்டு ஸ்ரீகுருஜி அவர்களின் அனுமதி, அங்கீகாரம் பெற அடியேன், ஸ்ரீ Y. வேதமூர்த்தி சாஸ்திரிகள், ஸ்ரீராமதாஸ் மூவரும் சென்னை சென்றோம். இதனைக் கண்ட ஸ்ரீகுருநாதர் அவர்களுக்கு சொல்லொணா மகிழ்ச்சி தன் வாழ்நாளில் இதுபோல் போட வேணுமென்று நினைத்திருந்ததாகவும் அது நிறைவேறுவது கண்டு மகிழ்வதாகவும் கூறி பூரண ஆசீர்வாதம் வழங்கினார்கள். பின்பு திதிநித்யா ஆவரண பூஜையை முழுவதும் தனியாக புத்தகமாக போடவேணுமென்ற தன் விருப்பத்தை வெளிப்படுத்தினார்கள். நாங்களும் அதனை விரைவில் அச்சுப் போடுவதாக கூறினோம். அதற்கான முன்னுரையையும் உடனே அவர்களே Dictate செய்தார்கள். அடியேன் எழுதிக்கொண்டேன். அதன்பின் தன்வசமிருந்த தன்னுடைய வ்யாசங்களின் கையெழுத்துப் பிரதிகளை எடுத்து அடியேனிடம் கொடுத்து "அவைகளை தக்கபடி திருத்தி, தலைப்பு வாரியாகத் தொகுத்து உரியகாலத்தில் வசதிப்படி புத்தகமாக வெளியிடும்படி கூறி" கொடுத்தார்கள். (இது விவரம் பகுதி 2ல் குறிப்பிடப்பட்டுள்ளது) திதி நித்யா படம் முழுவதும் அச்சான பின்பு அனுப்புவதாகக் கூறி அன்று இரவே திரும்பிவிட்டோம். இது நடந்தது 8–8–80 அன்று. வந்தபின் Proof சரி செய்த படத்தை பிரஸில் கொடுத்து படங்களை அச்சுப்போட சொல்லியாகி விட்டது. மறுதினம் பிரஸுக்கு சென்று பார்த்தபோது "நித்யக்லின்னா திதி

நித்யா" வின் Block –ல் (மத்திய பிந்து) உள்ள புள்ளி உடைந்து விட்டது என்றும் பிரதிகள் எதுவும் அச்சுப்போடவில்லை என்று பிரஸில் கூறினார்கள். உடன் அடியேன் பார்த்து, மறுபடியும் வேறு 'பிளாக்' செய்து 'கம்போஸ்' செய்வது முடியாத செயல் என்பதைக் கருதி முழுவதும அச்சுப் போட்ட பின்பு விடப்பட்ட புள்ளியை தனியே வைத்து விடலாம் என்று கூறி மேற் கொண்டு வேலையை முடிக்கச் செய்தேன். சென்னையில் திதி நித்யா ஆவரண பூஜை புத்தகம் அச்சிடச் சொல்லி முன்னுரை எழுதிக் கொடுத்த சமயம், அதில் தனக்கும் திதி நித்யைகளுக்கும் தன் வாழ்க்கையில் மிகுந்த தொடர்பு உண்டு என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்நிகழ்ச்சி எதற்காக எழுதப்பட்டது என்பது பின் பகுதியில் விளக்கப் பட்டிருக்கிறது. மேலும் 12–08–1980 சென்னையிலிருந்து திரும்பிய அன்று விடையல் கருப்பூரில் அருட்சக்தியால் ஆட் கொள்ளப்பட்டு நிகழ்த்திய அருள் உரையில் **"பூரணத்வம்"** பற்றியே விவரிக்கப்பட்டது. அந்த உரையின் பகுதி முழுமையும் இதோ உள்ளது. 1982–83–ல் 'தந்தப்பிரஸாதம்' மாத இதழ்களில் வெளியானது).

## 3. பூர்ணத்வம்

'யார் பூர்ணன்?' என்ற தலைப்பில் 12–8–80 அன்று எழுதியது.

"கோர ஸம்ஸாரமெனும் கடலினைத் தாண்ட நல் ஓடமாய் அமைந்திருக்கும் "ஸத்குரு"வின் திருவடிகளை ஸ்மரிப்பதல்லால் பிறவியெடுத்த ஜீவன்களுக்கு வேறு கதியில்லை. இதனையே ஸதா கருத்தில் கொண்டு நிற்கும் தருணம் தோன்றும் விளக்கங்களைச் சிந்தனை செய்வோம்.

தவித்துக் கொண்டும் தாபத்துடனும் ஜன்மாஸா பல்யமடைய வேண்டி நிற்கும் "ஸுத்தாத்மா" தன்னுடைய சுய ஸ்வரூபத்தை தனக்குக் காட்டியும், உள்ளொளிரும் ஆத்ம ஸ்வரூபத்தை தரிசிக்கச் செய்தும், இப்படியாக ஸ்வரூப நிர்ணயம் செய்து நிற்கும் குருவை ஒரு நிலையில் அவரது புற ஸ்வரூபத்தை மறக்க வேண்டியவனாக இருக்கிறான். மறந்தும் விடுகிறான்.

சுயஸ்வரூபத்தை தரிசிக்கும் இவனுக்கு அன்னிய ஸ்வரூபம் அவசியமில்லையே! ஆற்றைக் கடக்கின்ற வரையில் தானே ஓடத்தினுடைய உபயோகம். இருட்டில் உள்ள பொருளைக் காணும் வரையில் தானே விளக்கு வேண்டப்படுகிறது.

இதுபோலவே தான் பரோக்ஷமான "ஞானம்" கிடைக்கிற வரையில் உபதேச, ஸ்ரவணமும், அந்த ஞானத்திடத்தில் லயிக்கிற வரையில் மனனமும், அந்த பரோக்ஷமான ஞானம் தன் ஆத்மாவினிடத்திலே அபேதமாக அமைகிறவரையில் நிதித்யாஸன, தாரணைகளும் அவசியமாக இருக்கின்றன.

கடைசியில் ஞான ஸித்தியிலே செய்யப்பட்ட, அனுஷ்டிக்கப்பட்ட அப்யாஸ கர்மங்கள் அத்தனையும் நசித்து கேவல "ஞானமே" நிறைகிறது.

இப்படிப்பட்டதான ப்ரம்மானுபவத்தை அறிய வேண்டியது என்பது மஹாவாக்கியத்தை மங்களமாய்ப் பெற்ற ஸாதகனுடைய, ஆத்மனுடைய செயலாகும். இதை விட்டு கேவல உபதேசத்தை மட்டும் கொண்டு "ஸ்வரூபத்தை நிரூபணம்" செய்த ) குருவை அபேதமாகக் காணவேண்டியதை விட்டு அரைகுறையாக ஆத்ம ஞானம் என்று சொல்லிக் கொண்டு நிற்கும் ஜீவனாகிய ஸாதகன் பூரணன் அல்ல. இவனுக்கு ஆகி விட்டது என்று சொல்லிக்கொண்டிருப்பதும் பூரணாபிஷேகம் அல்ல. அவன் கண்டது புத்தகத்தில் எழுதப்பட்டது– வாயினால் சொல்லிக்கொண்டிருப்பதான ப்ரம்மத்தைத் தான்; ஞானத்தைத்தான். இவன் ஆத்மார்த்தம் அறியாத வேதாந்தி, சூன்யமார்க்கம் அறியாத ஸன்யாஸி.

தன்னைத்தான் அறிந்து கொள்ளாமல் பந்தமென்றும், மோக்ஷமென்றும் கூறுவதால் பயனென்ன? சித்திரத்திலே கண்ட விளக்கினால் இருள் அகலுமா? ஆகவே விஷயங்கள் நசிக்கிற வரையில் ஸாதனங்களை அனுஷ்டிக்க வேண்டியவனாக இருக்கிறான்.

ஆகவே ஏகாக்ரமான சிந்தையோடு கூடி பிரம்ம நிஷ்டையை புரிந்து மனோலயமடைந்தவனை ஆத்மபோதம் ஆட்படுத்தி வைக்கும்.

இப்படிப்பட்ட ஆத்மன் எண்ணுகிறான், 'மதம் எனற காட்டை வெட்டி, அகங்காரம் என்ற கல்லை அகழ்ந்து, ஹ்ருதயமாகிய பூமியை சமப்படுத்தி, அதற்கு மௌனம் என்ற வரப்புப் போட்டு ஞான விதையை நடவேண்டும். பிறகு அன்பு என்கிற

நீரைப்பாய்ச்சி, ஞானப்பழம் பழுக்கிற வரையில் மாயையாகிய பறவைகளை விரட்டி தன் சுயத்ருஷ்டி என்கிற பரணில் அமர்ந்து, பூரண பலத்தை அடைய ஒரு நல்ல உபகாரத்தை ஸத்குரு உனக்கு செய்திருக்கிறானே! உத்தம சரீரத்தை அடைந்த ஹே! ஆத்மனே! இதனை நீ உணராமல் உன்னையே நீ ஏமாற்றிக் கொண்டு உன்னையே நீ பூரணன் என்று சொல்லிக் கொண்டு ஏன் புலம்புகிறாய்?

"பூர்ணம்" என்பது காசு கொடுத்து வாங்கும் கடைச்சரக்கல்ல கேட்டு மாறு;ம் கைவல்யம் அது.

உணர்ந்து உயர பரம் பொருளாம் ஸத்குரு பாதுகை களை ஸ்மரிப்போம்."

இந்த அருள் உரை எதற்காக நிகழ்தப்பட்டது என்பதற்கும், முன்பு கூறிய திதி நித்யாவின் நித்யக்லின்னா திதி 'பளாக்' கின் பிந்து உடைந்த அந்த நிகழ்ச்சி ஏன் நடந்தது என்பதற்கும் சரியான உண்மை விளக்கம் விரைவில் கிடைத்து விட்டது. அதாவது –

**4. அகண்டமாய் நிறைந்தார்**

(6–9–80) உ ரௌத்ரீ வருஷம் ஆவணி மீ க்ருஷ்ண பக்ஷ த்ரயோதசி (நித்யக்லின்னா திதிநித்யா வ்யாப்த்தி) – ஸ்ரீரமண மஹரிஷி ஸமாதி யடைந்த அதே திதி என்பது இங்கு நினைவூட்டுகிறேன்) – ஸ்திரவாஸரம் – சனிப்பிரதோஷ காலம் – 4.57 க்கு ஸ்ரீவித்யா உபாஸனையையே தன் முழு மூச்சாகக் கொண்டு வாழ்ந்து நல்ல ஸம்ப்ரதாயத்தை ப்ரகாசிக்கச் செய்த ஸ்ரீஅனந்தா நந்த நாதர் என்ற தீக்ஷா நாமத்தையுடைய பூஜ்ய ஸ்ரீC.V. ஸ்வாமி சாஸ்திரிகள் தன் தேஹத்தைத் துறந்து எந்ததேவியை அபேதமாகக் கண்டு ஆனந்தித்து வந்தாரோ அவளுடன் இரண்டறக் கலந்தார்கள். நரவேஷத்தை நீத்து, தமது யதார்த்த வடிவ, மேலான போக்கும் வரவுமில்லாத பொது அருள் வெளியாய், பரிபூர்ண அகண்ட சச்சிதானந்தமாய், குருதேவர் யாதொரு மறைப்புமின்றி ப்ரகாசித்தார். இந்த சனிக்கிழமை ப்ரதோஷகாலம் எனபது மஹாப்ரதோஷம் என்று கூறப்படும். சிவன் விஷமுண்ட நாள் சனிக்கிழமையாகும் இதனால் இந்த கிழமையில் அமையும் ப்ரதோஷம் மிகச்சிறப்பும் மஹிமையும் பொருந்தியதாகும் என்பர்.

இந்த மிக சிறப்பான நேரத்தையே குருநாதர் தேர்ந்தெடுத்திருந்தார்கள் என்று உணருகிறோம்.

அடியேனுக்கு முதல் நாள் அவர்கள் தன் உலக வாழ்வின் கடைச் நிமிஷங்களில் இருந்த நேரத்தில் கொடுக்கப்பட்ட தந்தி மாலையில் கிடைத்தது. உடன் ரயிலில் புறப்பட்டு வந்த பொழுது காலையில் அவர்களின் பூத உடலைத்தான் தரிசிக்க முடிந்தது. ஸத்குரு நாதர் அடியேனிடம் சில தடவை கூறியதுண்டு. ஒருவன் மரிக்கும் சமயம் ஈசாவாஸ்ய உபநிடதத்தில் இருவாசங்கள் (17–18) சொல்லப்படவேண்டும். அதன் ஞாபகம் அடியேனுக்கு இருந்ததே தவிர அதனை அவரது தேஹவ்யோக சமயத்தில் கூற முடியாதவனாக இருந்துவிட்டேன்.

'அழுது புரண்டாலும் மாண்டார் வருவாரோ' என்பார்கள். இருந்தாலும் அந்ததேரம் துக்கம் ஏற்படுவது என்பது உடலுடைய யார்க்கும் இயல்பல்லவா? அவர்களுக்கு

அவரது குமாரர் ஸ்ரீவெங்கடேச்வரனால் ப்ரஹ்மமேத ஸம்ஸ்காரம் செய்யப்பட்டது.

ரௌத்ரீயாப்தே பாத்ரபத க்ருஷ்ண த்ரயோதச்யாம்
ஸந்த்யாயாமே ஸ்திரேதினே! ஸ்ரீஅனந்தா நந்தகுருவர: பேஜே ஸ்ரீபுரம்பரம்!

குருதத்வம் என்பது எங்கும் நீக்கமற நிறைந்தது. அது அகண்டாகாரமாக எங்கணும் எந்நாளும் பரவி நிற்பது. இங்கும் சிஷ்யன் என்கிற அவரின் பிரதியாக உள்ள சைதன்யத்திற்குள்ளும் அவரே ஊடுருவி நிற்கிறார். அல்லவா! எனவே சிஷ்யன் குருவை எக்காலத்தி லும் பிரிந்து இல்லை. குரு என்பவர் சிஷ்யனிடம் தன்மயமாகிவிட்ட நிலையே தான் இங்கு குருவின் தேஹே வியோக நிகழ்ச்சி நமக்குப் புலப்படுகிறது.

*போமடா வெளியோடே வெளிதான் சேரும்*
*புதுமையடா வாய்வோடே வாயு சேரும்*
*ஊமடா தீயோடே தீதான் சேரும்*
*உத்தமனே யப்புடேனே யப்பு சேரும்*
*ஆமடா மண்ணுடனே மண்தான் சேரும்*
*அவரவர்களினத்தோடே யவரவர்கள் சேர்ந்திடுவாரே!*

ஸ்ரீஸத்குரு அவர்களின் வ்யாப்தி தினத்தன்று அஷ்டாங்க கணனப்படி 'நித்யக்லின்னா திதி நித்யா' வாக அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது. அவர் கூற்றுப்படி திதி நித்யாவுக்கும் அவர்கள் வாழ்க்கைக்கும் தொடர்பு உண்டு என்பது இதில் நிரூபணமாகிறது. இந்த நிகழ்ச்சியின் சூசகத்தைதான் நித்யக்லின்னா திதி நித்யாவின் 'ப்ளாக்' கில் பிந்து உடைபட்டதன் மூலம் குருநாதர் முன்பே உணர்ந்தியிருக்கிறார்.

அவர்களால் இயற்றப்பட்ட திதி நித்யாக்களை குறிக்கும் ஸ்தோத்தி ரத்தை பாராயணம் செய்வதே அவருக்கு நாம் செய்யும் கடமையாகும்.

**இது சுடர் 8ன் கடைசியில் உள்ளது**

குருதத்வம் என்பது ஆன்மஸ்வரூபம் என்பதும். அதுவே அவரை ஸதாஸ்மரிக்கும் சிஷ்யனின் உள்ளத்தில் வீசும் ஒளி என்பதும், அதன் ஒவ்வொரு சலனமும் சிஷ்யனிடம் உணர்த்தப்படும் என்பதும் – முன்பே அடியேனுக்கு ஏற்பட்ட அருள் உரை நிரூபிக்கிறது. எனவேதான் பூர்ணன் என்பவனின் நிலை முன்பே ஆத்மனால் வெளிப்படும்படி செய்த ஸத்குரு – இங்கு தன் ப்ரகாசத்தை எப்போதும் ஒளிவிடும் அருட்பெரும் ஜோதியாகச் செய்து ஸாதகனின் உள்ளத்தில் 'குருப்ரகாசமாக' நிறையும் படி செய்து விட்டார்கள்.

ஸத்குருவின் புகழ் வெல்க!

[OM: The invisible is the whole the visible is the whole. From the whole the visible universe has come out. The whole remains ever itself even though the infinite universe has come out of it.]

*ஓம் பூர்ணமது: பூர்ணமிதம் பூர்ணாத் பூர்ண முதச்யதே!*
*பூர்ணஸ்ய பூர்ண மாதாய பூர்ண மேவாவ சிஷ்யதே!!*

அதுவும் பூர்ணம், இதுவும் பூர்ணம். பூர்ணத்திலிருந்து பூர்ணம் உதயமாகியுள்ளது. பூர்ணத்திலிருந்து பூர்ணத்தை எடுத்தாலும் மிஞ்சுவதும் பூர்ணமே!

*ஸஹநாவவது! ஸஹநௌ புனத்து! ஸஹ வீர்யங்கரவாவஹை'*
*தேஜஸ்விநாவதீத – மஸ்துமா வித்விஷா வஹை!*
*ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி:!!*

- ✓ எங்கும் நிறைந்து யாவுமான பொருளை ஆத்ம ஜோதி' என்றே சாத்திரங்கள் கூறுகின்றன.
- ✓ அக்னியைத் துதிக்கிறேன்' என்றே நான் மறையும் தொடங்குகிறது.
- ✓ செங்கதிர் தேவன் சிறந்த ஒளியையே காயத்ரி மந்த்ரம் துதிக்கிறது.
- ✓ பரமேஸ்வரன் ஒளி மலையாக, திரு அண்ணாமலையாக விளங்குகிறான்.
- ✓ ஆதியும் அந்தமுமில்லா அருட்பெருஞ் சோதி' என்கிறார் மாணிக்க வாசகர்.
- ✓ ஸ்ரீநாராயணனை ஜோதியின் உருவமாகக் கண்டே விடுவேனோ என் விளக்கை?' என்கிறார் நம்மாழ்வார்.
- ✓ நாதாசல தீப (ஒலிமலையில் விளங்கும் ஒளி விளக்கு) என்று ராமனை வருணிக்கிறார் தியாகய்யர்.
- ✓ ஆயர்குலத்தில் தோன்று மணி விளக்கு' என்று கண்ணனைக் குறிப்பிட்டிருக்கிறார் ஆண்டாள்.
- ✓ விக்நேச்வரனின் 108 நாமங்களில் ஒன்று ஞானதீபம் என்பது.
- ✓ தீபமங்கள ஜோதி என்று முருகப்பெருமானை அருணகிரி துதிக்கிறார்.
- ✓ காஞ்சிபுரிமணி தீபிகே (சுச்சியம் பதியில் விளங்கும் மணி விளக்கே) என்று அருள்மிகு காமாக்ஷி மஹாத்ருபுரசுந்தரியை மூகர் அழைக்கிறார்.
- ✓ ஸ்ரீலலிதா ஸஹஸ்ரநாம முடிவில் தேவியை அக்ஞான த்வாந்த தீபிகா (அக்ஞானத்தைப் போக்கும் விளக்கு) என்று சொல்லியிருக்கிறது.
- ✓ பூஜைக்குரிய விளக்குக்கு காமாக்ஷி விளக்கு என்றே பெயர்.
- ✓ குரு என்றாலும் இருளைப்போக்கும் ஜோதி என்றே பொருள்.

– ஸ்ரீசந்திரசேகர சரஸ்வதி சுவாமிகள்

ஜகத்குருவின் இவ்வாசகங்களை ஸ்மரித்துக் கொண்டு உள்ளொளிரும் ஆத்ம ப்ரகாசத்தின் ஒளியை உணர்வோமாக.

*பாதயவா பாதாளே ஸ்தாபயவா ஸகலலோக ஸாம்ராஜ்யே !*
*மாதஸ்தவ சரணயுகளம் நாக முஞ்சாமி நைவமுஞ்சாமி!!*
*பரம் குஹ்யமிதம் ஸ்தானமவ்யக்தம் பிரம்ம நிராஸ்ரயம்*
*வ்யோமரூபம் கலா சூக்ஷ்மம் விஷ்ணோஸ் தத்பரம் பதம்!*

பரவஸ்து மறைந்திருக்கிறது. அது தோற்றத்திற்கு எட்டாத இருப்பிடம். அது எதையும் சாராதது. அது பரவெளி நுண்ணியது; இது விஷ்ணுவின் பரமபதம் என்று கூறப்படுகிறது.

இப்படிப்பட்ட தோற்றத்திற்கு எட்டாத இருப்பிடத்தை உடைய ப்ரம்மவஸ்துவை தோற்றத்திற்கு கொண்டு வந்து காண நமக்கு 'ஸ்ரீகுருப்ரகாசம் தேவைப்படுகிறதல்லவா?

இந்த ப்ரகாசத்தின் விமர்சத்தை அவனியிலுள்ளோரும் உணர, ஸ்ரீகுருவின் கடாக்ஷத்தால் இது விமர்சிக்கப்பட்டது.. 'குணநாடி குற்றமுநாடி அவற்றுள் மிகை நாடி மிக்க கொளல்" பெரியோர்க்கு இயல்பு. ஸ்ரீகுருவின் சரணங்களை பலமுறை வணங்கி இதனை நிறைவு செய்கிறேன். நிறைவான மணத்துடன் நானிலத்தோர் நிறைக! குருநாதர்களது ப்ரகாசத்தைக் கானம் செய்தபடி அமைவோம்.

உ

## ஸ்ரீகுரு ப்ரகாச பஞ்சகம்

கணபதி ஸபர்யா தத்வப்ரகாசம்
குஹானந்த மண்டல கவிதாப்ரகாசம்!
சிதானந்த பதாப்ஜ ரேணுப்ரகாசம்
அநந்தாநந்த ஸ்ரீகுருப்ரகாசம்!! (1)

ஸ்ரீவித்யா மார்க்க ஸத்ய ப்ரகாசம்
ஓகத்ரய மண்டல நாதப்ரகாசம்!
ஜகத்குரு நாத மித்ர ப்ரகாசம்
அநந்தா நந்த ஸ்ரீகுருப்ரகாசம்!! (2)

வேதாந்தரூப விமலப்ரகாசம்
அத்யாத்ம ரூப ஸமயப்ரகாசம்!
அஹம்போத தத்வ ஆத்மப்ரகாசம்
அநந்தா நந்த ஸ்ரீகுருப்ரகாசம்!! (3)

நித்யாத்மரூப ஞானப்ரகாசம்
நிரந்தரா த்வைத போதப்ரகாசம்!
ஸாமாதிவேத பூர்ணப்ரகாசம்
அநந்தா நந்த ஸ்ரீகுருப்ரகாசம்!! (4)

மஹா நித்யா ரூப மாத்ருப்ரகாசம்
பதத்வயானந்த பாதப்ரகாசம்!
காமே சானந்த கருணாப்ரகாசம்
அநந்தா நந்த ஸ்ரீகுருப்ரகாசம்!! (5)